# Copy of Deposition

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**DVC No**.6/2022

**மனுதாரர் தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்:நதியா (PW1) | ஜாதி: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது: |

**2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் நாள் வெள்ளிக்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் பலகை எழுத்தர் பெ. அருள்குமார் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

*(1 எதிர் மனுதாரர் ஆஜர், 2 முதல் 4 எதிர் மனுதாரர்கள் ஆஜரில் இல்லை)*

**ம.சா.–1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர் மனுதாரர்கள் தரப்பு ):-**

எங்களது திருமணம் இரு வீட்டார் சம்மதத்துடன் தான் நடைபெற்றது. திருமணம் நடைபெறுவதற்கு 1 மாதத்திற்கு முன்பே நிச்சயதார்த்தம் நடைபெற்றது. 1ம் எதிர்மனுதாரர் 10ம் வகுப்பு வரை தான் படித்துள்ளார் என்பது எனக்கு ஏற்கனவே தெரியும். நான் MCA, M.Phil வரை படித்துள்ளேன். திருமணம் நடைபெறுவதற்கு முன்பே நான் தனியார் பள்ளியில் பணிபுரிந்து வந்தேன். திருமணத்திற்கு பின்னிட்டும் பணிபுரிந்து கோவிட் காலத்திற்கு பிறகு பணியில் இருந்து விலகிவிட்டேன். நான் 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பாடம் சொல்லி கொடுத்து வந்தேன். நான் 1 வருட காலம் பணிபுரிந்தேன். மாத வருமானம் எனக்கு ரூ.15,000/- ஆகும்.

2. 1ம் எதிர்மனுதாரரின் தாய்மாமா செல்லமுத்து என்றால் சரிதான். செல்லமுத்து தான் திருமணத்திற்கு உண்டான செலவுகளை 1ம் எதிர்மனுதாரர் கொடுத்ததன் பேரில்

செய்தார் என்றால் சரியல்ல எனது பெற்றோர் தான் அனைத்து செலவுகளையும் செய்தார்கள். எனது மனுவிலோ, முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ 40 பவுன் நகைகளில் என்னென்ன ஆபரணங்கள் என்னென்ன மாடல் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளேன். மேற்படி நகைகள் வாங்கியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையில் 40 பவுன் நகைகளை போடதா காரணத்தினால் தான் இவ்வழக்கில் நகைகளின் மாடல் குறித்து கூறாமலும், ரசீது தாக்கல் செய்யாமலும் உள்ளது என்றால் சரியல்ல, திருமணத்திற்கு முன்பே எனது தகப்பனார் பெயரில் மேற்படி நகைகள் வாங்கப்பட்டது.

3. நிச்சயதார்த்தத்தின் போது 4 பவுனில் 2 வளையல், 7 பவுனில் ஒரு ஆரம், திருமணத்தின் போது 7 பவுனில் ஒரு தாலிக்கொடி ஆகியவற்றை எதிர்மனுதாரர்கள் அணிவித்தார்கள் அது என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல மேற்படி நகைகள் ஏதும் என்னிடம் இல்லை. பள்ளியில் வேலைக்காக சேரும்போது 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு மற்றும் கல்லூரி சான்றிதழ்கள் ஆகியவற்றின் அசல் சான்றிதழ்களை கொடுத்து தான் பணியில் சேர்வார்கள் என்றால் சரிதான். மேற்படி சான்றிதழ்கள் நான் பள்ளியில் சேரும்போது கொடுத்ததால் அது என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல, கோவிட் காலத்தில் பள்ளியில் இருந்து விலகி மேற்படி சான்றிதழ்களை பெற்று எனது கணவர் வீட்டில் தான் பீரோவில் வைத்து பூட்டி சாவியை எனது மாமியாரிடம் கொடுத்துவிட்டு வந்தேன்.

4. திருமணம் முடிந்த பின்னிட்டு ராஜேந்திரா தனியார் பள்ளிக்கு வேலைக்கு செல்கிறேன் என்றால் சரியல்ல, என்னிடம் அசல் சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் வேலைக்கு செல்ல இயலவில்லை. ராஜேந்திரா தனியார் பள்ளியில் நான் 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பாடம் நடத்தும் ஆசிரியராக இருந்து வந்து மாதம் ரூ.18,000/- சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தேவைகளை நானே நிறைவேற்றிக்கொள்ளும் நிலையில் உள்ளேன் வேறு ஒருவர் உதவி

தேவையில்லை என்றால் சரியல்ல. நான் வீட்டில் இருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் வந்து என்னை தொந்தரவு செய்கிறார் என்று சிவகிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இதுநாள் வரை 1ம் எதிர்மனுதாரர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

5. புகாரில் சொல்லியுள்ளவாறும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளவாறும் எனக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, நான் கர்ப்பமாக இருக்கும் போதே 1ம் எதிர்மனுதாரர் என்னை எட்டி உதைத்தார் எனவே எனக்கு பாதுகாப்பு வேண்டும். மேற்படி விவரம் குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால் தான் காவல்நிலையத்தில் புகார் ஏதும்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, 28.02.2020ம் தேதி மேற்படி சம்பவம் நடைபெற்றது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகாரில் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டு முகவரியாக 6 குறுக்கு வலசு, இச்சிபாளையம் கிராமம், கொடுமுடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

6. தங்கவேல் உடைய அப்பா மருதய்ய கவுண்டருக்கு தான் இந்த வீடு சொந்தம் என்றால் சரிதான். விஜயகுமாருக்கு எந்த வீடும் கிடையாது அதன் அடிப்படையில் நான் குடியேறுவதற்கு உண்டான ஆணை கேட்டுள்ளேன் அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, நான் திருமணத்திற்கு பின்னிட்டு மேற்படி வீட்டில் தான் வசித்து வந்தேன் தற்போதும் எதிர்மனுதாரர் அந்த வீட்டில் தான் வசித்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.10,000/- தான் சம்பாதித்து வருகிறார் அதனால் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வயதான பெற்றோர்களுக்கு மருத்துவ செலவும், பெற்றோர்களுக்கு கண்பார்வை குறைபாடு மற்றும் சர்க்கரை நோய் உள்ளதால் அதற்குண்டான மருத்துவ செலவும் செய்து வருகிறார் என்றால் அது உண்மையல்ல, தற்போதும் அவரது பெற்றோர்கள் நன்கு வேலை செய்து வருகிறார்கள்.

7. நான் மனுவில் 1ம் எதிர்மனுதாரருக்கு 20ஏக்கர் பூமியும் அதன் மூலம் ரூ.30,00,000/- வருமானமும், பைனான்ஸ் தொழிலில் ரூ.1,00,000/- வருமானமும் வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல உண்மைதான். 20 ஏக்கர் பூமிக்கு உண்டான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரிந்த வரை தாக்கல் செய்துள்ளேன். நான் உயர்படிப்பு படித்துள்ளதாலும் 1ம் எதிர்மனுதாரர் 10ம் வகுப்பு வரை மட்டும் படித்துள்ளதாலும் நான் அவரை உதாசினம் செய்து தன்னிச்சையாக பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல. கணவருக்கு வேண்டி சட்டப்படியான பணிவிடை ஏதும் நான் செய்யாமல் புறக்கணித்துவிட்டேன் என்றால் சரியல்ல.

8. எனது அக்கா பெயர் சுமதி என்றால் சரிதான். அவர் தற்போது பெற்றோர் வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல, அவர் அவரது கணவருடன் வசித்து வருகிறார். நான் எனது அக்கா சொல் பேச்சு கேட்டுதான் கணவர் வீட்டில் இருந்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்தின் போது பெட்டி பணம் ரூ.5,00,000/- கொடுத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடாக ரூ.30,00,000/- கேட்பது அதிகமானது மற்றும் நியாயம் அல்ல என்றால் சரியல்ல நியாயம்தான். எனக்கும் குழந்தைக்கும் ரூ.40,000/- மாத ஜீவனாம்சமாக கேட்பது அதிகப்படியான தொகை என்றால் சரியல்ல தேவையான தொகைதான். 1ம் எதிர்மனுதாரர் ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அதற்கு நான் எதிர் வாதம் தாக்கல் செய்துள்ளேன்.

9. எனது அப்பா விவசாய வேலை செய்து வருகிறார். எனது தகப்பானருக்கு சுமார் 10 ஏக்கர் பூமி உள்ளது. எனது தகப்பனார் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. ஓரளவு எனது குடும்பம் வசதியான குடும்பம் என்றால் வசதி குறித்து எனக்கு தெரியவில்லை. அதேபோல் இரும்பு கடை வைப்பதற்காக ரூ.10,00,000/- 1ம்

எதிர்மனுதாரர் என்னிடம் கேட்டார் என்று புகாரில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல உண்மைதான். நானும் எனது தங்கையின் கணவரும் சேர்ந்து தொழில் செய்வதாக 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் கேட்டார். பொங்கல் திருவிழாவிற்கு 1 மணிநேரம் தான் மனுதாரரின் தந்தை வீட்டில் 1ம் எதிர்மனுதாரர் இருக்க சொல்லி வற்புறுத்தினார் என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு 1ம் எதிர்மனுதாருக்கு எந்தவொரு பெண்ணுடனும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல, தொடர்பு உள்ளது என்னிடமே அதை 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார். நான் கேட்கக்கூடிய பரிகாரங்கள் எதுவும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் எனக்கு கிடைக்க வேண்டியதுதான்.

**மறுவிசாரணை: - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

VELLINGIRI LOGANATHAN

Digitally signed by VELLINGIRI LOGANATHAN
Date: 2024.09.20 18:05:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| sd/-xxx | sd/-xxx | sd/-xxx |
| Complainant/Petitioner Counsel | Witness | Accused/ Defence counsel |